**செய்தி வெளியீடு எண்: 519** **நாள் : 14.10.2014**

**<u>பத்திரிகைக் குறிப்பு</u>**

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் செயல்பாடுகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் 14.10.2014 அன்று கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் அலுவலக கூட்ட அரங்கில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் **திருமதி. எஸ்.கோகுல இந்திரா** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர்சிங், இ.ஆ.ப., கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மற்றும் கோ-ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு. தி. ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., துறையின் கூடுதல் இயக்குநர், இணை இயக்குநர்கள் (மற்றும்) அனைத்து சரக துணை இயக்குநர்கள்/உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் சட்டப்பேரவை விதி எண். 110 இன் கீழ் அறிவிக்கப்பட்ட திட்டங்களான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம், விலையில்லா பெடல் தறிகள் வழங்கும் திட்டம் போன்ற திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

மேலும், 2014–15 ஆம் ஆண்டில் துறை மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள் குறித்தும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் கீழ்க்கண்ட திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆய்வு செய்தார்கள்.

- விலையில்லா வேட்டி சேலை திட்டத்தின் கீழ், 2015 ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது ஏழை எளிய மக்களுக்கு வழங்கப்பட உள்ள வேட்டி சேலை உற்பத்தியின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்த அமைச்சர் அவர்கள், இத்திட்டத்தினை விரைந்து செயல்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

- மேலும் வருகின்ற ஜனவரித் திங்களில் வருவாய்த் துறையினருக்கு தேவையான வேட்டி, சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, முழுவதும் வழங்கப்பட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டது.

- பள்ளி சிறார்களுக்கு விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டத்தினை 2015-2016 ஆம் கல்வியாண்டில் செயல்படுத்துவதற்கான செயல் திட்டம் குறித்து ஆய்வு செய்து தக்க அறிவுரை வழங்கப்பட்டது.

- கைத்தறி நெசவாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வரும் நலத் திட்டங்களான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், முதியோர் ஓய்வூதியம் திட்டம், குடும்ப ஓய்வூதியம் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்கள் தனியார் வியாபாரிகளிடம் உரிய ஒப்பந்தம் மேற்கொண்டு, விற்பனை செய்து நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கத்தக்க வகையில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபட அறிவுறுத்தப்பட்டது.

- துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்ந்து இலாபம் ஈட்டுவதற்குத் தேவையான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் ஆலோசனைகள் வழங்கி அரசின் அனைத்து திட்டங்களின் பயன்களும் நெசவாளர்களுக்கு கிடைக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

- கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் விற்பனை நிலையங்களின் மூலம் தீபாவளி பண்டிகைக்கான விற்பனையினை மேம்படுத்த தேவையான விற்பனை உத்திகளை மேற்கொள்ளுமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

------

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**